முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மானியங்களைத் தந்து உதவுவதற்கு தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

66—

பணிபுரியும் மகளிர் விடுதி

***28852—திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பணிபுரியும் மகளிரின் நலனைக் கருத்தில் கொண்டு 14-5-2013 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில் 13 மாவட்டங்களில் புதிதாக 20 பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவங்க அறிவிப்பு செய்து, அதன்படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் புதிதாக 3 பணிபுரியும் மகளிர் விடுதிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு அருகே கூடுவாஞ்சேரியில் அய்யஞ்சேரி என்ற இடத்தில் பணிபுரியும் மகளிர் விடுதி துவங்க மாவட்ட நிருவாகத்தால் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

திரு. து. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியைச் சுற்றி மகேந்திரா சிட்டி மற்றும் பல தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. தனியார் தொழிற்சாலை, அரசு அலுவலகங்களில் பணிபுரிகின்ற மகளிர் பல மாவட்டங்களில் இருந்து வந்து தங்கி வேலை செய்கின்ற சூழ்நிலை உள்ளது. அவர்கள் குடும்பம் காக்க தனியார் விடுதியில் தங்கி வருகின்றார்கள். அங்கே விடுதிக் கட்டணம் அதிகமாக இருப்பதால் இவர்கள் வாங்கும் சம்பளத்தில் அதைக் கட்ட பெரிதும் சிரமப்படுகின்றனர். செங்கல்பட்டில் அரசு விடுதி அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு பாதுகாப்பாகவும், உதவியாகவும் இருக்கும். எனவே, மகளிர் விடுதி அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டுக்கும் கூடுவாஞ்சேரிக்கும் ஒன்றும் பெரிய தூரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மகேந்திரா சிட்டி என்பதே கூடுவாஞ்சேரிக்கு அருகிலேதான் இருக்கிறது. மறைமலை நகர், அடுத்தது மகேந்திரா சிட்டி. ஆக, அருகிலேயே இருக்கிற காரணத்தாலும், பணிபுரியக் கூடிய பெண்கள் தாம்பரத்திலிருந்து வரக்கூடியவர்கள், செங்கல்பட்டில் இருந்து வரக்கூடியவர்கள் என இரண்டு பகுதிகளிலேயிருந்து வேலைக்குச் செல்லக்கூடியவர்களுக்கு நடுவிலே ஒரு பகுதியைத் தேர்வு செய்தால் அவர்களுக்கு வசதியாக இருக்குமே என்பதற்காகத்தான் கூடுவாஞ்சேரியிலே அய்யஞ்சேரி என்ற இடத்தில் அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

[2014 பிப்ரவரி 18

திரு. து. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி சொல்லுகிறேன். அதேநேரத்தில், இந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி என்று பல்வேறுபட்ட கல்லூரிகள் சமீபகாலத்திலே நமது ஆட்சியிலே நிறுவப்பட்டு, நூற்றுக்கணக்கான மகளிர் ஊழியர்கள் இன்றைக்கு தருமபுரி நகரத்திலே பணிபுரிகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமீபகாலத்திலே நிறைய பொறியியல் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் வந்தன என்று சொல்கிறார்கள். சமீபகாலத்திலே எப்போது வந்தது என்று தெளிவாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அம்மா அவர்கள் ஆட்சியிலே இத்தகைய கல்லூரிகள் எல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டுவரப்பட்டன என்பது உண்மைதான். கல்லூரிகளில் பணிபுரியக்கூடிய பெண்கள், அலுவலகங்களிலே பணிபுரியக்கூடியவர்கள் இருக்கிறார்கள்.

2014 பிப்ரவரி 18]

தொட்டில் குழந்தைகள் அதிகமாக உள்ள மாவட்டம் தருமபுரி மாவட்டம், குறிப்பாக கடந்த காலத்தில் பெண் குழந்தைகள் அதிகமாக இருந்தன, இப்போது இல்லை. அவர்கள் பணிபுரிவதற்கு அரசு ஒரு மகளிர் விடுதியைக் கட்டித் தருவதற்கும், அதேபோல, திருப்பூர் பகுதியிலே பல மாவட்டங்களிலிருந்து வந்து பணி புரியக்கூடிய பெண்களுக்கு திருப்பூரில் ஒரு மகளிர் விடுதியை கட்டித் தருவதற்கும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையிலே கேட்க வேண்டிய கேள்வியை இப்போது சமூக நலத் துறையில் கேட்டிருக்கிறார்கள். கேள்வி பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்கப்படுவது சம்பந்தமானது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு 2014-2015 ஆம் நிதியாண்டில் 17 கோடியே 50 இலட்சம் செலவில் 14 பணிபுரியும் மகளிர் விடுதி புதிதாக கட்டப்பட வேண்டுமென்று அறிவுறுத்தி இருக்கிறார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கோருவதற்கு முன்னுரிமை தந்து, கிருஷ்ணகிரி, தருமபுரி போன்ற பகுதிகளில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைப்பது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று அயராது உழைத்துக்கொண்டிருக்கும் வருங்கால பாரதப் பிரதமர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். I.T. துறையில் வேலை செய்யும் பெண்கள் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்து அதிக அளவில் வேளச்சேரியில் வசிக்கின்றனர். அவர்களுக்கு பெண்கள் தங்கும் விடுதி அமைக்க மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

வேளாண் ஆராய்ச்சி நிலையம்

***37312 திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாபநாசம் தொகுதியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.